**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.51** **நாள் : 16.04.2018**

**தமிழக அரசின் சார்பில் பெருநகர சென்னை மாநகராட்சியில் 1192 பயனாளிகளுக்கு ரூ.4.95 கோடி மதிப்பிலான திருமண நிதியுதவியையும் மற்றும் 9,536 கிராம் தாலிக்கு தங்கத்தினையும் மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார் அவர்களும், சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை அமைச்சர் டாக்டர்.வி.சரோஜா அவர்களும் வழங்கினார்கள்.**

தமிழக அரசின் சார்பில் பெருநகர சென்னை மாநகராட்சியில் 405 ஏழைப் பெண்களுக்கு ரூ.25,000/– வீதம் ரூ.1,01,25,000/– மற்றும் தலா 8 கிராம் வீதம் 3,240 கிராம் தங்கமும் மற்றும் பட்டம் / பட்டயம் வரை படித்த 787 ஏழைப் பெண்களுக்கு ரூ.50,000/– வீதம் ரூ.3,93,50,000/– மற்றும் தலா 8 கிராம் வீதம் 6,296 கிராம் தங்கம் என மொத்தம் 1192 பயனாளிகளுக்கு ரூ.4.95 கோடி மதிப்பிலான திருமண நிதியுதவியையும் மற்றும் 9,536 கிராம் தாலிக்கு தங்கத்தினையும், மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார் அவர்களும், சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை அமைச்சர் டாக்டர்.வி.சரோஜா அவர்களும் இன்று (16.04.2018) தியாகராய நகரில் உள்ள சர்.பிட்டி தியாகராய அரங்கில் வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை பெண்களின் கல்வித் தகுதியை உயர்த்திடவும், ஏழைப் பெண்களின் இளம் வயது திருமணத்தை தவிர்த்திடவும் மட்டுமில்லாமல் சமுதாயத்தில் ஏழைப் பெண்களுக்கு மரியாதை ஏற்படுத்துவதற்காகவும் தமிழ்நாடு அரசின் சார்பில் வழங்கப்படும் சிறப்பு திட்டங்களில் ஒன்றான ஏழைப் பெண்களின் திருமணத்திற்காக மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவி திட்டத்தின் மூலம் பத்தாம் வகுப்பு படித்த ஏழைப் பெண்களுக்கு ரூ.25,000/–ம் மற்றும் 4 கிராம் தங்கமும் மற்றும் பட்டம் / பட்டயம் வரை படித்த ஏழைப் பெண்களுக்கு ரூ.50,000/– மற்றும் 4 கிராம் தங்கமும் 17.05.2011 முதல் வழங்கிட உத்தரவிட்டுள்ளார்கள்.

இத்திட்டத்தின்கீழ், பெருநகர சென்னை மாநகராட்சியில் 2011–12ம் வருடம் முதல் 2016–17 வருடம் வரை பத்தாம் வகுப்பு படித்த 11,147 ஏழைப் பெண்களுக்கு ரூ.25,000/–ம் வீதம் ரூ.27,86,75,000/– மற்றும் தலா 4 கிராம் வீதம் 44,588 கிராம் தங்கம் வழங்கப்பட்டுள்ளது.

அதேபோல் இத்திட்டத்தின்கீழ் பெருநகர சென்னை மாநகராட்சியில் 2011–12ம் வருடம் முதல் 2016–17ம் வருடம் வரை பட்டம் / பட்டயம் வரை படித்த 14,623 ஏழைப் பெண்களுக்கு ரூ.50,000/–ம் வீதம் ரூ.73,11,50,000/– மற்றும் தலா 4 கிராம் வீதம் 58,492 கிராம் தங்கம் வழங்கப்பட்டுள்ளது.

23.05.2016 முதல் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதியுதவி திட்டத்தின் கீழ் பத்தாம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற ஏழைப் பெண்களுக்கு ரூ.25,000/–ம் மற்றும் 8 கிராம் தங்கமும் மற்றும் பட்டம் / பட்டயம் வரை படித்த ஏழைப் பெண்களுக்கு ரூ.50,000/– மற்றும் 8 கிராம் தங்கமும் வழங்கிட உத்தரவிட்டுள்ளார்கள்.

இப்புதிய திட்டத்தின் கீழ் ஆர்.கே.நகர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 5 பட்டம் / பட்டயம் வரை படித்த 5 ஏழைப் பெண்களுக்கு ரூ.50,000/– வீதம் ரூ.2,50,000/– மற்றும் தலா 8 கிராம் வீதம் 40 கிராம் தங்கமும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கி துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, ஆர்.கே.நகர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 5 பட்டம் / பட்டயம் வரை படித்த 5 ஏழைப் பெண்களுக்கு ரூ.50,000/– வீதம் ரூ.2,50,000/– மற்றும் தலா 8 கிராம் வீதம் 40 கிராம் தங்கமும் 22.09.2016 அன்று வழங்கப்பட்டுள்ளது.

அதேபோல் 2017–18 ஆம் நிதியாண்டில் ஜனவரி மாதம் வரை பத்தாம் வகுப்பு படித்த 267 ஏழைப் பெண்களுக்கு ரூ.25,000/– வீதம் ரூ.66,75,000/– மற்றும் தலா 4 கிராம் வீதம் 1,068 கிராம் தங்கமும் மற்றும் பட்டம் / பட்டயம் வரை படித்த 518 ஏழைப் பெண்களுக்கு ரூ.50,000/– வீதம் ரூ.2,59,00,000/– மற்றும் தலா 4 கிராம் வீதம் 2072 கிராம் தங்கமும் 02.06.2017, 24.07.2017, 28.07.2017 மற்றும் 31.10.2017 ஆகிய நான்கு தேதிகளில் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இந்நிதியாண்டில் ஜனவரி மாதம் வரை பத்தாம் வகுப்பு படித்த 445 ஏழைப் பெண்களுக்கு ரூ.25,000/– வீதம் ரூ.1,11,25,000/– மற்றும் தலா 8 கிராம் வீதம் 3,560 கிராம் தங்கமும் மற்றும் பட்டம் / பட்டயம் வரை படித்த 1,234 ஏழைப் பெண்களுக்கு ரூ.50,000/– வீதம் ரூ.6,17,00,000/– மற்றும் தலா 8 கிராம் வீதம் 9,872 கிராம் தங்கமும் 16.08.2017, 17.08.2017, 19.09.2017 மற்றும் 21.09.2017 ஆகிய நான்கு தேதிகளில் வழங்கப்பட்டுள்ளது.

தற்பொழுது 2017–18 ஆம் நிதியாண்டில் பத்தாம் வகுப்பு படித்த 405 ஏழைப் பெண்களுக்கு ரூ.25,000/– வீதம் ரூ.1,01,25,000/– மற்றும் தலா 8 கிராம் வீதம் 3,240 கிராம் தங்கமும் மற்றும் பட்டம் / பட்டயம் வரை படித்த 787 ஏழைப் பெண்களுக்கு ரூ.50,000/– வீதம் ரூ.3,93,50,000/– மற்றும் தலா 8 கிராம் வீதம் 6296 கிராம் தங்கம் என மொத்தம் 1192 பயனாளிகளுக்கு ரூ.4.95 கோடி மதிப்பிலான திருமண நிதியுதவி மற்றும் 9,536 கிராம் தாலிக்கு தங்கம் இன்று வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜெ.ஜெயவர்த்தன், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.எஸ்.ஆர்.விஜயகுமார், மைலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆர்.நட்ராஜ், விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் திரு.விருகை வி.என்.ரவி, தி.நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.சத்யநாராயணன், சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை முதன்மைச் செயலர் மரு.கே.மணிவாசன், இ.ஆ.ப., சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை ஆணையர் திருமதி வி.அமுதவல்லி, இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையாளர் (சுகாதாரம்) திரு.பி.மதுசுதன் ரெட்டி, இ.ஆ.ப., உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**